The Hindu (English)
Dated: 18-04-2025

# Election rules row: SC allows 3 weeks for EC response

**Press Trust of India**
NEW DELHI

The Supreme Court on Thursday granted three more weeks to the Election Commission (EC) to respond to the pleas of Congress general secretary Jairam Ramesh and others against the recent amendments to the 1961 election rules.

A Bench comprising Chief Justice Sanjiv Khanna and Justice Sanjay Kumar had issued a notice to the Centre and the poll panel on January 15 on Mr. Ramesh's plea and sought a response. The Bench set July 21 for the next hearing.

The government has tweaked an election rule to prevent public inspection of certain electronic documents, such as CCTV camera and webcasting footage, besides video recordings of candidates, to prevent their misuse.

Mr. Ramesh's plea was filed in December and had expressed "hope" that the apex court would help "restore the fast eroding" integrity of the electoral process.

D.T. Next
Dated: 18-04-2025

# ECI to hear '2-leaves' row on April 28

**CHENNAI: The Election Commission of India (ECI) will resume the hearing of the long-standing dispute over AIADMK's 'Two-Leaves' symbol on April 28.**

The Commission has directed both the petitioner and the respondents, including AIADMK General Secretary Edappadi K Palaniswami and expelled AIADMK leader O Panneerselvam, to appear for the hearing in Delhi. The resumption of proceedings follows the Madras High Court's verdict in February, which vacated a stay order that had halted the ECI's inquiry into the party's internal affairs.

"I am directed to state that personal hearings were conducted at ECI Secretariat on December 23 and 24, 2024 to hear the parties involved in Writ Petition No 5300 of 2024, as well as various other individuals who submitted representations," said ECI's Ashwani Kumar Mohal in a communication addressed to petitioner S Surya Moorthi. Expelled AIADMK leaders V Pugazhendhi and KC Palaniswamy are also among the petitioners in the case.

The Hindu (Tamil)

Dated: 18.04.2025

### இரட்டை இலை சின்னம் விவகாரம்

# ஏப்.28-ம் தேதி இறுதி விசாரணைக்கு ஆஜராக வேண்டும்

## இபிஎஸ், ஓபிஎஸ் உள்ளிட்டோருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ்

**சென்னை**

அதிமுகவின் இரட்டை இலை சின்னம் விவகாரம் தொடர்பாக ஏப்.28-ம் தேதி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைவரும் இறுதி விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்று தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதிமுகவில், பழனிசாமி பொதுச்செயலாளர் ஆனது செல்லாது. அவர் நடத்திய பொதுக்குழு மற்றும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் செல்லாது. கட்சி தலைமை பதவியை தொண்டர்களே நேரடியாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விதியை பழனிசாமி மாற்றியது செல்லாது என ஓபிஎஸ், கட்சியில் தொண்டர்களாக இருந்த ராம்குமார் ஆதித்யன், சூரியமூர்த்தி உள்ளிட்டோர் வழக்கு தொடர்ந்துள்ளனர். அந்த வழக்குகள் உரிமையியல் நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன.

இந்நிலையில், பழனிசாமி பொதுச்செயலாளராக தேர்தெடுக்கப்பட்டது செல்லாது என தொடரப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நிலையில், பழனிசாமி இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்த அனுமதிக்க கூடாது என சூரியமூர்த்தி, ராம்குமார் ஆதித்யன், ஓபிஎஸ், புகழேந்தி உள்ளிட்டோர் தேர்தல் ஆணையத்திலும் மனு அளித்துள்ளனர். அதன் மீது ஆணையம் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது.

இதற்கிடையே, அதிமுக தொடர்பாக, தான் தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி சூரியமூர்த்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில், சூரியமூர்த்தி மற்றும் ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் அளித்த மனுக்கள் அனைத்தின் மீது விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது. அதேநேரம், இவர்கள் யாரும் அதிமுக உறுப்பினர் இல்லை என்பதால், இவர்களின் மனுக்களை நிராகரிக்க வேண்டும் என்று அதிமுக சார்பில் தேர்தல் ஆணையத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் ஆணையம் சார்பில், பழனிசாமி, பன்னீர்செல்வம், பெங்களூரு புகழேந்தி, ராம்குமார் ஆதித்யன், சூரியமூர்த்தி உள்ளிட்டோருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதில், அதிமுக விவகாரம் தொடர்பாக இறுதி விசாரணை ஏப்.28-ம் தேதி மாலை 3 மணிக்கு டெல்லியில் உள்ள தேர்தல் ஆணையத்தில் நடைபெறுகிறது. அதில் அனைவரும் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பழனிசாமி வழக்கு முடித்துவைப்பு**

இதற்கிடையே, சட்டப்பேரவை தேர்தல் நெருங்குவதால் இரட்டை இலை சின்னம் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு காலக்கெடு நிர்ணயம் செய்யக்கோரி பழனிசாமி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கவுதம் குமார், 'இரட்டை இலை சின்னம் தொடர்பாக ஏப்.28-ம் தேதியன்று இறுதி விசாரணை நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது' எனக்கூறி அதற்கான அறிவிப்பை தாக்கல் செய்தார்.

அதைப்பதிவுசெய்து கொண்ட நீதிபதிகள், இதுதொடர்பாக பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

Daily Thanthi
Dated: 18.04.2025

### தேர்தல் நடத்தை விதிகள் திருத்தத்துக்கு எதிரான வழக்கு

# தேர்தல் கமிஷன் பதில் அளிக்க 3 வார கால அவகாசம்

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, ஏப்.18-

கடந்த 1961-ம் ஆண்டின் தேர்தல் நடத்தை விதிமுறைகளில் தேர்தல் கமிஷன் பரிந்துரையின்பேரில் மத்திய சட்ட அமைச்சகம் கடந்த டிசம்பர் மாதம் ஒரு திருத்தம் செய்தது.

வாக்குப்பதிவின்போது, வாக்குச்சாவடியில் பதிவான கண்காணிப்பு கேமரா காட்சிகள், வெப் கேமரா பதிவுகள், வீடியோ பதிவுகள் ஆகியவற்றை பொது ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இதை எதிர்த்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் உள்பட 3 பேர் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்தனர். அவற்றுக்கு பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கும், தேர்தல் கமிஷனுக்கும் சுப்ரீம் கோர்ட்டு நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

இந்நிலையில், நேற்று இம்மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தன. தேர்தல் கமிஷன் தரப்பு மூத்த வக்கீல் மணிந்தர் சிங், தேர்தல் கமிஷன் பதில் அளிக்க கூடுதலாக 3 வார கால அவகாசம் கேட்டார். அதை ஏற்று, 3 வாரம் அவகாசம் அளித்த நீதிபதிகள், விசாரணையை ஜூலை 21-ந் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

Daily Thanthi

Dated: 18.04.2025

### இரட்டை இலை சின்னம் விசாரணை:

# தேர்தல் கமிஷனில் ஆஜராக புகழேந்திக்கு அழைப்பு

புதுடெல்லி, ஏப்.18-

அ.தி.மு.க. உட்கட்சி பிரச்சினைகள் முடிவடையும் வரை, கட்சி நிர்வாகத்தையும், சின்னத்தையும் யாருக்கும் வழங்கக் கூடாது என சென்னை ஐகோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில், தேர்தல் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது. முன்பு இந்த விசாரணைக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் இடைக்காலத்தடை பெறப்பட்டது. ஆனால் அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான உத்தரவின்படி தற்போது விசாரணை மீண்டும் தொடங்கியுள்ளது. இதனைத்தொடர்ந்து விசாரணையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பி விசாரணைக்கு அழைத்து வருகிறது. இதன்படி வக்கீல் புகழேந்திக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. சென்னை ஐகோர்ட்டின் பிப்ரவரி 12-ந்தேதி நாளைய உத்தரவின் அடிப்படையில் விசாரணை மீண்டும் தொடங்கி இருப்பதாக தெரிவித்துள்ள தேர்தல் கமிஷன், இது குறித்த விசாரணைக்கு வருகிற 28-ந்தேதி பிற்பகல் 3 மணிக்கு தேர்தல் கமிஷனில் நேரில் ஆஜராகுமாறு புகழேந்திக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

Daily Thanthi

Dated: 18-04-2025

யானை சின்னத்தை பயன்படுத்த தடை கேட்கும் வழக்கில்

# நடிகர் விஜய் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்

## மாவட்ட கோர்ட்டு நோட்டீஸ்

சென்னை, ஏப்.18-

யானை சின்னத்தை பயன்படுத்த தடைக் கேட்டு தொடரப்பட்ட வழக்குக்கு பதில் மனு தாக்கல் செய்யும்படி த.வெ.க., தலைவர் விஜய்க்கு சென்னை கோர்ட்டு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு உள்ளது.

சென்னை 2-வது உதவி சிட்டி சிவில் கோர்ட்டில், பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் பெரியார் அன்பன் என்கிற இளங்கோவன் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

### யானை சின்னம்

நடிகர் விஜய் தமிழக வெற்றிக்கழகம் என்ற புதிய கட்சியை தொடங்கியுள்ளார். இந்த கட்சியின் கொடி, சிவப்பு மற்றும் மஞ்சள் நிறம் கொண்டதாகவும், அதில் வாகை மலருடன், 2 யானைகள் இருப்பதுபோல் உருவாக்கியுள்ளார். ஆனால், யானை சின்னம் எங்களுடைய தேசிய கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமாகும். இதை இவர் பயன்படுத்தக் கூடாது.

இதுகுறித்து தேர்தல் ஆணையத்திடம் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் புகார் செய்தோம். அதற்கு பதில் அளித்த தேர்தல் ஆணையம், விஜய் கட்சி யானை சின்னம் கேட்டு விண்ணப்பம் செய்யவும் இல்லை. அந்த கட்சிக்கு யானை சின்னம் ஒதுக்கவும் இல்லை.

### தடை வேண்டும்

யானை சின்னம் பகுஜன் சமாஜ் கட்சிக்குத்தான் ஒதுக்கப்பட்டு உள்ளது. மீறி பயன்படுத்தினால், கட்சி சின்னம் மற்றும் பெயர் தவறாக பயன்படுத்துதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் விஜய் கட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து நிவாரணம் பெறலாம் என்று கூறியுள்ளது.

எனவே, யானை சின்னத்தை பயன்படுத்த த.வெ.க.வுக்கு தடை விதிக்க வேண்டும். யானை சின்னத்தை பயன்படுத்தக் கூடாது என்று உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி சக்திவேல் முன்பு விசாரணைக்கு வந்தது.

### பதில் மனு

அப்போது மனுதாரர் வக்கீல் பி.ஆனந்தன் ஆஜராகி, "ஒரு அரசியல் கட்சியின் சின்னத்தை வேறு விதமாக மாற்றி பயன்படுத்த முடியாது. உதாரணத்துக்கு உதய சூரியன் சின்னத்தை சூரிய கதிர்கள் இல்லாத வெறும் சூரியன் போன்ற சின்னத்தை பயன்படுத்த முடியாது. இரட்டை இலைக்கு பதில் ஒரு இலையோ, கைசின்னத்துக்கு பதில் விரல்களை மூடிய கை என்பது போலவோ சின்னங்களை வேறு கட்சிகள் பயன்படுத்த முடியாது" என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி சக்திவேல், இந்த வழக்கை வருகிற 28-ந்தேதிக்கு தள்ளிவைத்தார். அதற்குள் பதில் மனு தாக்கல் செய்யும்படி த.வெ.க. தலைவர் விஜய், பொதுச்செயலாளர் புஸ்ஷி ஆனந்த் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

Dinamalar

Dated: 18-04-2025

# கொடியில் யானை விஜய் பதிலளிக்க கோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப். 18–**

த.வெ.க., கட்சி கொடியில் இடம்பெற்றுள்ள யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கில், அக்கட்சி தலைவர் விஜய் பதிலளிக்க, சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச்செயலர் பெரியார் அன்பன் என்கிற இளங்கோவன் தாக்கல் செய்த மனுவில், 'த.வெ.க., கட்சி கொடியில், யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்' என, கோரியிருந்தார்.

இந்த மனு, சென்னை முதலாவது உதவி சிவில் நீதிமன்ற நீதிபதி கே.வி. சக்திவேல் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, பகுஜன் சமாஜ் கட்சி தரப்பில், வழக்கறிஞர் பி.ஆனந்தன் வாதிட்டதாவது:

தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சிக்கு யானை சின்னம் ஒதுக்கப்பட்டு உள்ளது. நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி கொடியில், யானைகள் இடம் பெற்றிருப்பது, தேர்தல் சின்னங்கள் விதிகளுக்கு முரணானது.

ஏற்கனவே, இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு புகார் அனுப்பினோம். உரிய நடவடிக்கையை தேர்தல் ஆணையம் எடுக்கவில்லை.

இவ்வாறு அவர் வாதிட்டார்.

இதையடுத்து, வரும் 29ம் தேதிக்குள் த.வெ.க., தலைவர் விஜய், பொதுச்செயலர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை நீதிபதி தள்ளி வைத்தார்.

Dinakaran

Dated: 18-04-2025

## இரட்டை இலை சின்னம்

# வரும் 28ம் தேதி தேர்தல் ஆணையம் விசாரணை

### இபிஎஸ், ஓபிஎஸ் ஆஜராக உத்தரவு

சென்னை, ஏப்.18: அதிமுகவின் இரட்டை இலை சின்னம் தொடர்பாக வரும் 28ம் தேதி தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த உள்ளது. இந்த விவகாரத்தில் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

அதிமுகவின் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்வு செய்தது உள்ளிட்ட தீர்மானங்களை ஏற்கக் கூடாது; அண்ணா திமுகவின் அதிகாரப்பூர்வமான இரட்டை இலை சின்னம் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்றும் வரும் வழக்கு விசாரணை முடிவடையும் வரை அந்த சின்னத்தை எந்த தரப்புக்கும் ஒதுக்கக் கூடாது என்பது சென்னை உயர்நீதிமன்றத்தில் அதிமுக முன்னாள் எம்பி கேசி பழனிசாமி உள்ளிட்டோர் தாக்கல் செய்த வழக்கு. இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு எதிராக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது. இந்த தடைக்கு எதிராக அதிமுக முன்னாள் எம்பிக்கள் கே.சி. பழனிசாமி, ரவீந்திரநாத், ராம்குமார் ஆதித்தன் உள்ளிட்டோர் மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இதனால் அதிமுக விவகாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், அருள் முருகன் அமர்வு விசாரித்தது.



இந்த விசாரணையின் முடிவில், அதிமுகவின் இரட்டை இலை சின்னம் உள்ளிட்ட விவகாரங்களை இந்திய தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம் என அதிரடியாக தீர்ப்பளித்தது. இது அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு நெருக்கடியாக பார்க்கப்பட்டது.

இதனிடையே அண்மையில், இந்திய தேர்தல் ஆணையத்தில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஒரு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதில், இரட்டை இலை சின்னம் தொடர்பான விவகாரத்தை விரைவாக விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் தேர்தல் ஆணையமானது வரும் 28ம் தேதி, இரட்டை இலை சின்னம் உள்ளிட்ட அதிமுக விவகாரங்களை விசாரிக்க இருக்கிறது. இதனால் வரும் 28ம் தேதி எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை தேர்தல் ஆணையத்தில் ஆஜராகவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

Dinakaran

Dated: 18.04.2025

தவெக கட்சி கொடியில் இடம்பெற்றுள்ள

# யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரி பிஎஸ்பி வழக்கு

**விஜய் பதில் தர சிட்டி சிவில் நீதிமன்றம் உத்தரவு**

சென்னை, ஏப். 18: சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் பெரியார் அன்பன் என்கிற இளங்கோவன் தாக்கல் செய்த மனுவில், தவெக கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த மனு சென்னை சிட்டி சிவில் நீதிமன்ற நீதிபதி சக்திவேல் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது பகுஜன் சமாஜ் கட்சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பி.ஆனந்தன், பகுஜன் சமாஜ் கட்சி தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட கட்சி. அந்த கட்சிக்கு யானை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. அசாம் தவிர மற்ற மாநிலங்களில் பகுஜன் சமாஜ் கட்சி மட்டுமே இந்த சின்னத்தை பயன்படுத்த முடியும்.



இந்த நிலையில், நடிகர் விஜயின் தமிழக வெற்றிக்கழகம் கட்சி கொடியில் யானைகள் இடம்பெற்றிருப்பது தேர்தல் சின்னங்கள் விதிகளுக்கு முரணானது. ஏற்கனவே இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திற்கு புகார் அனுப்பியபோது, தவெக கட்சி இன்னும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யும் போது இது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது என்று வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த வழக்கில் வரும் 29ம் தேதிக்குள் தவெக கட்சி தலைவர் விஜய், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் பதிலளிக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தார்.

Dinamani

Dated: 18-04-2025

## தவெக கொடியில் யானை சின்னம்

# விஜய் பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஏப். 17: தவெக கட்சிக் கொடியில் இடம்பெற்றுள்ள யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கில், அக்கட்சியின் தலைவர் விஜய், பொதுச் செயலர் என்.ஆனந்த் ஆகியோர் பதிலளிக்க சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலர் பெரியார் அன்பன் (எ) இளங்கோவன் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில்,தவெக கட்சிக் கொடியில் யானை சின்னத்தைப் பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த மனு சென்னை உரிமையியல் நீதிமன்ற நீதிபதி சக்திவேல் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது பகுஜன் சமாஜ் கட்சி தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், பகுஜன் சமாஜ் கட்சி தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி; அந்தக் கட்சிக்கு யானை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தச் சின்னம், அஸ்ஸாம் தவிர மற்ற மாநிலங்களில் பகுஜன் சமாஜ் கட்சிக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. விஜயின் தவெக கட்சிக் கொடியில் யானைகள் இடம்பெற்றிருப்பது தேர்தல் சின்னங்கள் விதிகளுக்கு முரணானது.

ஏற்கெனவே இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு புகார் அனுப்பியபோது, தவெக இன்னும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும், பதிவு செய்யும்போது இது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியிருந்தது. எனவே, யானை சின்னத்தைப் பயன்படுத்த தவெகவுக்கு தடை விதிக்க வேண்டும் என வாதிட்டார்.

இதையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு ஏப். 29-ஆம் தேதிக்குள் தவெக தலைவர் விஜய் மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலர் என்.ஆனந்த் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

Daily Thanthi
Dated: 19.04.2025

### வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கம் விவகாரம்:

# ‘தற்காலிக ஊழியர்கள் 2 பேர் பணி நீக்கம்’

## ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் தகவல்

சென்னை, ஏப்.19-

வாக்காளர் பட்டியலில் இருந்து முதியவர் பெயரை நீக்கியதற்காக 2 தற்காலிக ஊழியர்களை பணி நீக்கம் செய்து நடவடிக்கை எடுத்து உள்ளதாக ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் பதில் அளித்துள்ளது.

### ஜனநாயக உரிமை பறிப்பு

சென்னை வடபழனியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருபவர் மணி (வயது 75). 2021-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தல் வரை தவறாமல் அனைத்து தேர்தல்களிலும் வாக்கு அளித்துள்ளார். இந்தநிலையில், 2024-ம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடந்தபோது, வாக்காளர் பட்டியலில் இருந்து அவர் பெயர் நீக்கப்பட்டது.

இதை எதிர்த்து அவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதில், “வாக்குரிமை மூலம்தான் குடிமக்கள் விரும்பிய தலைவர்களை தேர்வு செய்யமுடியும். அந்த ஜனநாயக உரிமையை சென்னை மாநகராட்சி 10-வது மண்டல தேர்தல் அதிகாரி பறித்துவிட்டார்.

### அதிகாரிகள் விளக்கம்

என்னைப்போல தியாகராயநகர் சட்டசபை தொகுதியில் சுமார் 5 ஆயிரம் பேரது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு உள்ளது. கோடம்பாக்கம் மாநகராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த அதிகாரி ராஜலட்சுமி என்பவரிடம் விசாரித்தபோது, அ.தி.மு.க.,வைச் சேர்ந்தவர் என்பதால் என் பெயர் நீக்கப்பட்டதாக பதில் அளித்தார்.

உடனே அங்கிருந்த உயர் அதிகாரி துரைராஜிடம் இது குறித்து கேட்டபோது, நான் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்பதால் என் பெயரை பிரசாந்த் என்பவர் நீக்க சொன்னதாகவும், அதன்படி நீக்கியதாகவும் கூறினார். எனவே, என் ஜனநாயக உரிமை பறித்த இந்த அதிகாரிகள் மீது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 32-ன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

### ஊழியர்கள் பணி நீக்கம்

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வக்கீல் ஐ.எஸ்.இன்பதுரை ஆஜராகி வாதிட்டார். அப்போது, மாநில தலைவர் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் பதில் மனு தாக்கல் செய்தார்.

அதில்,”மனுதாரரின் புகார் மீது நடவடிக்கை எடுக்க இந்த ஐகோர்ட்டு கடந்த மார்ச் 20-ந் தேதி உத்தரவிட்டது. இதுபோல அரசியல் கட்சி பிரதிநிதிகள் கடந்த ஆண்டு நவம்பர் 28-ந்தேதி புகார் அளித்தனர். அதன்படி மாவட்ட (கலெக்டர்) தேர்தல் அதிகாரி விசாரணை நடத்தினார். பின்னர், வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் தற்காலிக பணியாளர்களாக, தனியார் நிறுவனத்தின் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட ராஜலட்சுமி, பிரசாத் ஆகியோர் கடந்த டிசம்பர் 17-ந்தேதி பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

### ஒழுங்கு நடவடிக்கை

மேலும், உதவி தேர்தல் பதிவு அதிகாரி துரைராஜ், வாக்குசாவடி நிலைய அதிகாரி மஞ்சுளா ஆகியோருக்கு வாக்காளர் பெயர் நீக்கம் குறித்து விளக்கம் கேட்டு கடந்த டிசம்பர் மாதம் 30-ந்தேதி விளக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது. இதில் மஞ்சுளா பதில் அளித்து விட்டார். துரைராஜும் விரைவில் பதில் அளிப்பார். அவர்களின் விளக்கத்தின் அடிப்படையில் விசாரணை நடத்தி சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என்று கூறியிருந்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், தவறு செய்து இருந்தால் அதிகாரிகள் மீது சட்டத்துக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரிக்கு உத்தரவிட்டனர்.

Dinamani

Dated: 19.04.2025

விதிமுறைகளில் திருத்தம்

# தேர்தல் ஆணையம் பதிலளிக்க மேலும் 3 வாரம் அவகாசம்

**புது தில்லி, ஏப். 18:** தேர்தல் நடத்தை விதிமுறைகள் திருத்தங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது பதிலளிக்க தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் மேலும் 3 வார கால அவகாசம் வழங்கியுள்ளது.

தேர்தல் தொடர்பான கண்காணிப்பு கேமரா காட்சிகள், இணையவழி ஒளிபரப்பு காட்சிகள், வேட்பாளர்கள் தொடர்புடைய விடியோ பதிவுகள் உள்ளிட்ட மின்னணு ஆவணங்களை பொது மக்கள் பெறுவதில் கட்டுப்பாடு விதித்து, 1961-ஆம் ஆண்டின் தேர்தல் நடத்தை விதி எண் 93-இல் கடந்த ஆண்டு டிசம்பரில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. தேர்தல் ஆணைய பரிந்துரையை ஏற்று, மத்திய சட்ட அமைச்சகம் இத்திருத்தத்தை மேற்கொண்டது.

முன்பு அனைத்து ஆவணங்களையும் பொதுமக்கள் பெறலாம் என்றிருந்த நிலையில், மின்னணு ஆவணங்களைப் பெற நீதிமன்றத்தை அணுகும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வாக்காளர்களின் அடையாளம் பொதுவெளியில் வெளியிடப்படுவதையும், மின்னணு ஆவணங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் தடுக்கும் நோக்கில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விதிமுறை திருத்தத்துக்கு எதிராக காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோர் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

'தேர்தல் தொடர்பான முக்கிய ஆவணங்களை அணுக பொது மக்களுக்கு கட்டுப்பாடு விதிப்பது, அரசமைப்புச் சட்டத்தின் 14, 19, 21 ஆகிய பிரிவுகளுக்கு எதிரானதாகும். தன்னிச்சையான இந்த திருத்தம், தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையைக் குறைத்து, முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். இது, அரசின் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்கும் தகவல் அறியும் உரிமை சட்ட நோக்கங்களுக்குப் புறம்பாக உள்ளது' என்று மனுக்களில் குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாக தேர்தல் ஆணையம் பதிலளிக்க உச்சநீதிமன்றம் கடந்த ஜனவரி 15-ஆம் தேதி உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் மீண்டும் விசாரணை நடைபெற்றது. அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் மணீந்தர் சிங், மனுக்கள் மீது பதிலளிக்க மேலும் 3 வார கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், அடுத்தகட்ட விசாரணையை ஜூலை 21-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.